வளமான வாழ்வே

நிறைவான செல்வம்



மார்பகப்புற்று நோய் பற்றி

நீங்களும் அறிந்து கொள்ளுங்கள்

## ➢ புற்றுநோய் என்றால் என்ன?

உடற்கலங்கள் உடலின் கட்டுப்பாட்டுக்கு அப்பால் தன்னிச்சையாக அசாதாரணமான முறையில் பெருகுவதால் ஏற்படும் கட்டிகள் புற்றுநோய் எனப்படும்.

## ➢ இலங்கையில் புற்றுநோய்....

புற்றுநோயானது இலங்கையில் மிகவும் அதிகரித்து வருகின்றது. ஆண்களில் வாய், தொண்டைப் புற்றுநோயும் பெண்களில் மார்பகப் புற்றுநோயும் முதலாவது இடத்தை வகிக்கின்றன.

## ➢ மார்பகப்புற்றுநோய்

எச்சரிக்கை அறிகுறிகள் (Warning symptoms)

- மார்பகத்தில் நோ அற்ற கட்டிகள் தோன்றுதல்.
- மார்பகத்தின் பருமன் அசாதாரணமாக அதிகரித்தல்.
- ஒரு மார்பு அசாதாரணமாக மறு மார்பிலும் பதிவாக இருத்தல்.
- மார்பகத்தின் தோலில் சுருக்கங்கள் ஏற்படுதல் (Puckering)
- மார்பகத்தின் தோலில் குழிகள் காணப்படுதல் (Dimpling)

- மார்பகத்தின் தோல் தோடம்பழத்தோல் அமைப்பாக மாறுதல் (Peau-de-Orange)
- முலைக்காம்பிலிருந்து ஏதாவது திரவம் அல்லது குருதிக்கசிவு ஏற்படல்
- முலைக்காம்பு உருமாறியிருத்தல் அல்லது உள்வாங்கப்பட்டிருத்தல்.
- கமக்கட்டுப் பகுதியில் நெறிகள் போடப்பட்டிருத்தல்.
- கையில் அசாதாரணமான வீக்கம் ஏற்படுதல்(Oedema of the upper limb)

## ➢ மார்பகப் புற்றுநோயின் பிந்திய நிலையில்...

பொதுவாக உடலில் ஏற்படும் அசாதாரண மாற்றங்கள்

- உடல் மெலிதல்
- சோர்வு
- இலகுவில் களைப்படைதல்
- பசியின்மை

## ➢ ஆபத்திற்குரியவர்கள் யார்?

- பெண்கள் ஆண்களைவிட அதிகளவில் (99% பெண்கள், 1% ஆண்கள்)
- குடும்பத்தவரிடையே மார்பகப் புற்றுநோய் உடையவர்கள்.

- அதிகளவில் ஈஸ்ரோஜன் (Oestrogen) ஓமோன் சுரப்பு வரக்கூடியவர்கள்.
  - மிகக் குறைந்தவயதில் பூப்படைதல் - 12 வயதிற்குள்.
  - கூடிய வயதில் மாதவிடாய் நிறுத்தல் - 50 வயதிற்குப் பின்
  - பிந்திய வயதில் முதல் கர்ப்பம் தாங்குபவர்கள் - 30 வயதிற்குப் பின்
  - குழந்தை இல்லாதவர்கள்
  - தாய்ப் பாலூட்டாதவர்கள்
- அதிக உடற்பருமன் உடையவர்கள்
- புகைப்பிடித்தல், மதுபானம் அருந்தும் பழக்கம் உடையவர்கள்.
- அதிக கொழுப்பு உணவை உட் கொள்பவர்கள்.
- நெஞ்சுப்பகுதியில் கதிர்வீச்சுக்கு உட்பட்டவர்கள்.

## ➢ சுயமார்புப் பரிசோதனை

- ஒவ்வொரு மாதமும் மாதப்போக்கின் பின் ஒரு வாரத்தினுள் அல்லது
- மாதப்போக்கு நின்றவர்கள் மாதத்தின் குறித்த ஒரு நாளில்
- குளிக்கும் போதோ / கண்ணாடியின் முன் நின்றோ / படுத்திருந்தவாறோ.

சுயமார்புப் பரிசோதனை செய்யலாம்.

## 1) பார்வை மூலம் பரிசோதித்தல் (Inspection)

கண்ணாடியின் முன் நின்று கைகளைத் தொங்க விட்டபடியும், இடுப்பில் வைத்தும் மேலே உயர்த்தியவாறும் மார்பகங்களில் மேலே கூறிய எச்சரிக்கை அறிகுறிகள் உள்ளனவா என அவதானித்தல்.

## 2) தொடுகை மூலம் பரிசோதித்தல் (Palpation)

- வலது மார்பை இடது கையாலும், இடது மார்பை வலது கையாலும்.
- 2ம், 3ம், 4ம், விரல் தட்டைப் பகுதியால் சோதித்தல்.
- விரல்களால் கிள்ளிச் சோதிக்க வேண்டாம். அப்போது சாதாரண மார்புகூட கட்டிபோல் சந்தேகம் தரலாம்.
- வெளிப்பகுதியில் இருந்து முலைக்காம்பை நோக்கி வட்ட வடிவில் சோதித்தல்.
- கமக்கட்டுப் பகுதியையும் சோதிக்கவும்
- இறுதியில் முலைக்காம்பை அமத்தி ஏதாவது திரவக்கசிவு உள்ளதா என அவதானிக் கவும்.
- ஏதாவது அறிகுறிகள் காணப்பட்டால் உடனடியாக வைத்தியரை நாடுங்கள்.

➢ **சிகிச்சை முறைகள்:**

- சத்திரசிகிச்சை மூலம் கட்டியை அல்லது மார்பகத்தை அகற்றல். (Lumpectomy or Mastectomy)
- கதிர்வீச்சுச் சிகிச்சை (Radio the rapy)
- மருந்துச் சிகிச்சை (chemotherapy)
- ஓமோன் சிகிச்சை (Hormonal therapy)

ஆரம்பகாலத்தில் கண்டறிந்து பூரண சிகிச்சை பெறுவதன் மூலம் ஆயுட்காலத்தை நீடிக்க முடியும்.

*"முற்கூட்டிய கவனம்*
*உயிராபத்தைத் தடுக்கும்"*

**வெளியீடு:**
**கல்விசார் பொருட்கள் தயாரிப்பலகு**
**சமுதாய மருத்துவத்துறை,**
**யாழ். பல்கலைக்கழகம்.**
**மே - 2007**

**தயாரிப்பு உதவி:**
**செல்வி. சிவரஞ்சனி சிவகுருநாதன்**
**(2002/FM/59)**
**4ம் வருட மருத்துவபீட மாணவி**

**அனுசரணை:**
**சேவாலங்கா மன்றம்**
**யாழ்ப்பாணம்.**